Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவு அஞ்சல்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திரு. ப. வேல்முருகன், பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தேனி மாவட்டம்,
கதவு எண் 446/A, 17 வது வார்டு,
நேருஜி வீதி, அல்லி நகரம்,
தேனி 625 531
E-mail ID - thenidtcp@gmail.com
www.tn.gov.in/dtcp

பெறுநர்

செயல் அலுவலர்,
வீரபாண்டி பேரூராட்சி,
தேனி வட்டம்,
தேனி மாவட்டம்.

ந.க.எண் 602/2022/தே.மா 2, நாள் 07.07.2022

ஐயா,

பொருள் : மனைஉட்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தேனி மாவட்டம், தேனி வட்டம், வீரபாண்டி பேரூராட்சி, வீரபாண்டி கிராமம், சர்வே எண்கள் 866/3B3A1 மற்றும் 866/3B3B1 ல் 1660ச.மீ பரப்பளவு இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைஉட்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை :

1) மனுதாரர் திரு.R.பார்த்திபன் அவர்களின் விண்ணப்பம், நாள் 29.04.2022
2) வேளாண்மை இணை இயக்குநர், தேனி அவர்களின் கடிதம் எண்.தி1/2644/2022, நாள் 25.04.2022
3) மனுதாரர் கடிதம் நாள் 24.06.2022 மற்றும் 06.07.2022 (நன்னிலை வரி கட்டணம் மற்றும் OSR கட்டணம் செலுத்தியது)
4) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 30.08.2017
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.
6) அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.06.2004
7) அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 4.5.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2201/2017/சிபி, நாள்.28.09.2017.
9) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும்
   அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020
10) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/BA2, நாள் 05.02.2020
11) அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 23.09.2020
12) அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 09.12.2020
13) சார்பதிவாளர், தேனி சார்பதிவாளர் அலுவலகம் கடிதம் ந.க.எண்.573/2022, நாள் 28.06.2022

14) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 4367/2019/BA2, நாள் 14.08.2021

****

தேனி மாவட்டம், தேனி வட்டம், வீரபாண்டி பேரூராட்சி, வீரபாண்டி கிராமம், சர்வே எண்கள் 866/3B3A1 மற்றும் 866/3B3B1-ல் 1660ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைஉட்பிரிவு அனுமதி கோரி பார்வை 1-ல் கண்டுள்ள கடிதம் மூலம் பெறப்பட்ட குடியிருப்பு மனைஉட்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது

1) மனைஉட்பிரிவுக்கு இணைப்பில் உள்ள மனைஉட்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது ஒப்புதல் வழங்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்திற்கு **ம.உ.வ/ந.ஊ.உ.இ(தே.மா) எண். 40/2022** என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைஉட்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1) 'The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2) பார்வை 7-ல் சுட்டிய அரசாணையின்படி நகர் ஊரமைப்பு துறையின் முன்அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017, விதி(3) -ன்படி உள்ளாட்சிக்கான **கூராய்வு கட்டணமாகரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து** கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்ட பின்னரே மனைஉட்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கணக்கு தலைப்பு

0217-Urban Development

60 - other urban Development Schemes

800 - other Receipts

AS -Receipts under Landuse Conversion charges

227 Non Taxation fees - 09 collections

(DPC-0217-60-800-AS-22709)

147

பார்வை 3-ல் கண்ட கடிதம் மூலம் நன்னிலை வரி கட்டணமும், OSR கட்டணமும், அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைஉட்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு செயல் அலுவலர், வீரபாண்டி பேரூராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற செயல் அலுவலர், வீரபாண்டி பேரூராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம்.

இணைப்பு

வரைபடம் மற்றும் நிபந்தனைகள் - 3 நகல்கள்.

நகல்

1. திரு.R.பார்த்திபன்,
த/பெ.ராமகிருஷ்ணன்,
184/F5, சோலைமலை
அய்யனார் கோவில் தெரு,
தேனி.
 — செயலாணை கடிதம் மட்டும்.

2. CHAIR PERSON,
Tamil Nadu Real Estate Regulatory Authority
CMDA Tower - II, First Floor, No-1A,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai - 600 008.
 — செயலாணை கடிதம் மற்றும் வரைபடம் - 1

3. வட்டாட்சியர்,
தேனி வட்டாட்சியர் அலுவலகம்,
தேனி.
 — செயலாணை கடிதம் மற்றும் வரைபடம்-1

4. உதவி இயக்குநர்,
நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி.
 — செயலாணை கடிதம் மற்றும் வரைபடம்-1

5. தொழில்நுட்ப வைப்பறை -1

தமிழ்நாடு அரசு

தேனி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,

தேனி மாவட்டம்.

ந.க.எண். 602/2022/தே.மா.2 நாள் 07.07.2022

ம.உ.வ/ந.ஊ.உ.இ.(தே.மா) எண். 40/2022

மனைஉட்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பி பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6) மனைஉட்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8) மனுதாரர் மனைஉட்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைஉட்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
9) அ. மேற்படி மனைஉட்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைஉட்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ மேற்படி மனைஉட்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும் இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்

10) மனுதாரர் உள்ளாட்சியிடமிருந்து மனைஉட்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைஉட்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைஉட்பிரிவு நுழைவாயில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும், மேலும் மனைஉட்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைஉட்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைஉட்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைஉட்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் இரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் :

மனைஉட்பிரிவு இடத்தின் பரப்பளவு = 1660 ச.மீ

<u>ஒதுக்கிய மனைகள்</u>

மனை எண்கள் (01 முதல் 08 வரை) = 08 எண்ணம்.

பொது ஒதுக்கீடு : (தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

பூங்கா = பூங்கா இடஒதுக்கீட்டிற்கான அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையினை உரிய அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம்.

03/08/2020

வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின்
நடவடிக்கைகள் முன்னிலை : சு.ஆறுமுகநயினார்.

ந.க.எண்.276/2022, நாள்.29.07.2022.

மனைப்பிரிவு அனுமதி எண்.03/2022–2023

பொருள் : மனைப்பிரிவு – தேனி மாவட்டம் – வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி வீரபாண்டி கிராமம் சர்வே எண்.866/3b3a1, 866/3b3b1-யில் 1660 ச.மீ நிலப்பரப்பளவில் மனைப்பிரிவுகள் அனுமதி வேண்டியது – தொழில் நுட்ப அனுமதி, மனுதாரர் விற்பனைக்குரியது பிளாட்டுகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு.ரா.பார்த்திபன், த.பெ.ராமகிருஷ்ணன், சோலைமலை அய்யனார் கோவில் தெரு, தேனி அவர்களின் விண்ணப்பம் நாள்.29.04.2022.
2. அரசாணை எண்.134/ந.நி.மற்றும் கு.வ.துறை நாள்.20.09.2002.
3. தேனி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.573/2022 நாள்.28.06.2022.
4. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், தேனி அவர்களின் ந.க.எண்.602/2022/தே.மா.2 நாள்.07.07.2022.
5. இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பாணை நாள்.11.07.2022.
6. வீரபாண்டி பேரூராட்சி மன்ற முன்னனுமதி நாள்.29.07.2022.
7. தொடர்புடைய ஆவணங்கள்.

*****

தேனி மாவட்டம், வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சியில் திரு.ரா.பார்த்திபன், த.பெ.ராமகிருஷ்ணன், சோலைமலை அய்யனார் கோவில் தெரு, தேனி என்ற முகவரியிட்டு விண்ணப்பதாரர் 29.04.2022ம் தேதியில் பார்வை 1ல் கண்டுள்ளவாறு வீரபாண்டி பேரூராட்சி வீரபாண்டி கிராமம் சர்வே எண்.866/3b3a1, 866/3b3b1-யில் தங்களுக்கு சொந்தமான 1660.00ச.மீ நிலப்பரப்பளவு இடத்தை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய உள்ளதாகவும் இந்த மனைப்பிரிவி உள்ள இடத்தை விற்பனை செய்வதற்கு உரிய அங்கீகாரம் வேண்டி நேரடியாக நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு உரிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பார்வை 4ல் கண்ட நகர் ஊரமைப்புத் துறை அவர்களின் கடிதத்தில் சர்வே எண்.866/3b3a1, 866/3b3b1–யில் 1660.00 ச.மீ இடத்தில் 8 எண்ணிக்கை மனைகளுக்கு தொழில் நுட்ப அனுமதி ம.வ/ந.ஊ.உ.இ(தே.மா) எண்.40/2022 நாள்.07.07.2022–ன்படி 1 முதல் 13 வரையிலான நிபந்தனைக்குட்பட்டும் 1 முதல் 2 வரை உள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து பார்வை 5ல் கண்டுள்ளவாறு பேரூராட்சி

மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களால் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையிலும் இறுதி ஒப்புதல் அங்கீகாரம் அளித்தும், மனைப்பிரிவு இடத்திற்கு தெருமின் விளக்கு அமைப்பதற்கு மதிப்பீட்டுத் தொகையும் மற்றும் மனைப்பிரிவிற்கு அங்கீகாரக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதனைக் கொண்டும் இந்த மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து காலியிடக் கட்டணம் வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

செயல் அலுவலர்
வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி
தேனி மாவட்டம்.

29/7/2022

இணைப்பு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்

திரு.ரா.பார்த்திபன்,
த.பெ.ராமகிருஷ்ணன்,
சோலைமலை அய்யனார் கோவில் தெரு,
தேனி.

நகல் 1. தேனி மண்டல நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சார் பதிவாளர், தேனி அவர்களின் பத்திரப் பதிவு தகவலுக்காக.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate